# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓய்வு)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

**ஆணை எண்: 120/பேரூ/2023**
**நாள் : 13.06.2023**

திருமதி ராஜம்மாள்,
பெண்ணாகரம்
தருமபுரி மாவட்டம் ... மனுதாரர்

செயல் அலுவலர்,
பெண்ணாகரம் தேர்வு நிலை பேரூராட்சி
தருமபுரி மாவட்டம் ... எதிர்மனுதாரர்

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் டவுன் மற்றும் வட்டம், போடுர் காலனி கதவு எண்.81 என்ற முகவரியைச் சேர்ந்த திருமதி ராஜம்மாள், என்பவரது 13.01.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.01.2023 அன்று பெறப்பட்டு, 120/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் டவுன் மற்றும் வட்டம், போடுர் காலனி கதவு எண்.81 என்ற முகவரியைச் சேர்ந்த திருமதி ராஜம்மாள் என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

" நான் மேற்கண்ட முகவரியில் தாழ்த்தப்பட்ட வகுப்பை சார்ந்த இந்து ஆதிதிராவிடர் இனத்தை சார்ந்த வறிய நிலையில் உள்ள குடும்பத்தை சார்ந்தவள் ஆவேன். நான் பெண்ணாகரம் தேர்வுநிலை பேரூராட்சியில் அனைவருக்கும் வீடுவழங்கும் திட்டத்தின்கீழ் பெண்ணாகரம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் ஆணைப்படி 2017–2018ம் ஆண்டிற்கான ந.க. எண். 775/2016/அ1, நாள்: 23.06.2017 தேதியில் வீடு கட்டுவதற்கான ஆணையை பெற்றேன். எனக்கு வீடு கட்ட வழங்கும் அரசு மானியத்தொகை ரூபாய் 50,000/– மட்டும் எனக்கு அனுப்பியதாக தேர்வுநிலை பேரூராட்சி அலுவலக பதிவேடுகளில் பதிவு செய்துள்ளனர். எனது பெண்ணாகரம் இந்தியன் வங்கியில் கணக்கு

எண். 6678316624 என்ற கணக்கில் அரசு மானியத்தொகையை வழங்குமாறு அலுவலகத்தில் பதிவு செய்திருந்தேன். எனது வங்கி கணக்கிற்கு பணம் அனுப்பாமல் HDFC வங்கி பாரதிபுரம் No41B சேலம் மெயின்ரோடு என்ற வங்கிக்கு அனுப்பியுள்ளதாக பென்னாகரம் தேர்வு நிலை பேரூராட்சி அலுவலத்தில் உள்ள அலுவலர்கள் கூறினார்கள். மேற்படி வங்கிக்கு சென்று முறையிட்ட போது மேற்படி தொகை எங்கள் வங்கியில் வரவு வைக்கவில்லை எனவும் நீங்கள் எங்கள் வங்கிக்கு வாடிக்கையாளர்(Customer) இல்லை எனவும் உங்கள் பணம் வினோத் கிருஷ்ணமூர்த்தி என்பவரின் வங்கி கணக்கு எண். 10018815488 என்ற எண்ணிற்கு State Bank of India, No.3, East Avani Moola Street, Amman Sannathi, Madurai-625 001 என்ற வங்கி கணக்கு எண்ணில் வரவு வைக்கப்பட்டுள்ளதாக HDFC வங்கி மேலாளர் ஆய்வு செய்து எனக்கு அறிவுரை வழங்கினார்.

நான் பென்னாகரம் State Bank of India கிளை மேலாளரை அணுகி கேட்ட போது மேற்கண்ட மதுரை வங்கியில் எனக்கு வழங்க வேண்டிய அரசு மானிய தொகை மதுரை வங்கி கணக்கில் உள்ளதாக உறுதிப்படுத்தினார். இது சம்பந்தமாக பென்னாகரம் தேர்வுநிலை பேரூராட்சி அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலக ஊழியரிடம் முறையிட்ட போது நாங்கள் உங்கள் வங்கி கணக்கிற்கு பணம் அனுப்பி வைத்து விட்டோம். எங்களால் ஒன்றும் செய்ய இயலாது என கூறிவிட்டனர். இதில் ஏதோ முறைகேடு நடந்துள்ளதாக தெரிய வருகிறது. என்னுடைய இந்தியன் வங்கி கணக்கிற்கு அரசு மானியதொகை அனுப்பாமல் எனக்கு சம்பந்தமில்லாத வங்கிக்கு முறைகேடான முறையில் பணம் அனுப்பியுள்ளது செயல் அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலரின் தவறான அணுகுமுறையாகும். இதில் ஏதோ முறைகேடு நடந்துள்ளதாக தெரியவருகிறது. எனவே தாழ்த்தப்பட்ட வகுப்பு இந்து ஆதிதிராவிடர் இனத்தை சார்ந்த எனக்கு மாற்று வங்கிக்கு சென்ற அரசு மானியத்தை என்னுடைய வங்கி கணக்கிற்கு மாறுதல் செய்து வழங்க நடவடிக்கை எடுக்கும்படியும் கேட்டுக் கொள்கிறேன்".

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 10.05.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் பென்னாகரம் தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது. பென்னாகரம் தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 29.05.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

மனுதாரர் தனது மனுவில் பென்னாகரம் பேரூராட்சியில் 2017–18ஆம் ஆண்டு அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் திருமதி ராஜம்மாள் க/பெ.முனுசாமி, போடூர் காலனி என்ற பயனாளிக்கு பென்னாகரம் தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் 23.06.2017 நாளிட்ட ஆணையின்படி வீடு கட்ட பணி ஆணை வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது. பயனாளியால் கட்டிடம் கட்டப்படுவதை கண்காணித்து Geo Tag மூலம் புகைப்படம் எடுக்கப்பட்டு பொறியாளரால் ஆய்வு செய்து அளவு புத்தகத்தில் பணியின் முன்னேற்றம் பதிவு செய்யப்பட்டு உதவி செயற்பொறியாளரின் மேலொப்பம் பெற்று

பேரூராட்சி மூலம் பயனாளியின் வங்கி கணக்கிற்கு கீழ்காணும் விவரப்படி தொகை விடுவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியின் நிலை | விடுவிக்கப்பட்ட தொகை | வங்கியின் பெயர் மற்றும் தேதி | ECS/PFMS மூலம் |
|---|---|---|---|---|
| (1) | Basement | 50,000 | இந்தியன் வங்கி, பென்னாகரம்/29.05.2019 | ECS மூலம் |
| (2) | Lintel | 50,000 | இந்தியன் வங்கி, பென்னாகரம்/15.05.2020 | ECS மூலம் |
| (3) | Roof | 50,000 | எச்.டி.எப்.சி வங்கி, பென்னாகரம்/18.05.2022 | PFMS மூலம் |

மேற்காணும் அட்டவணையில் வரிசை எண்.1 மற்றும் 2 ஆகியவற்றிற்கு பென்னாகரம் பேரூராட்சியில் இருந்து ஒருங்கிணைந்த பயனாளிகளுக்கு காசோலை மூலம் ECS முறையில் தொகை விடுவிக்கப்பட்டுள்ளது. இத்தொகை பயனாளியின் வங்கி கணக்கில் வரவாக்கம் செய்யப்பட்டுள்ளது. வரிசை எண்.3–ல் காணும் பணி முன்னேற்ற நிலைக்கு பென்னாகரம் பேரூராட்சியில் இருந்து எச்.டி.எப்.சி, தருமபுரி வங்கி கிளைக்கு PFMS முறையில் தொகை விடுவிக்க தெரிவித்து Advice Copy அனுப்பி வைக்கப்பட்டது. வரிசை எண்.1 மற்றும் 2 ஆகியவற்றிற்கான தொகை ECS மூலம் விடுவிக்கப்பட்ட நிலையில் மத்திய அரசின் சுற்றறிக்கையில் இப்பொருள் தொடர்பாக வங்கி கணக்கு துவங்கப்பட்டுள்ள அனைத்து வங்கிகளும் PFMS முறையின் மூலமாகவே பயனாளிகளின் வங்கி கணக்கிற்கு நேரடியாக தொகையினை அனுப்பிவைக்க வேண்டும் என்று வங்கிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளமையால் வங்கிக்கு Advice Copy அனுப்பி வைக்கப்பட்டது.

மனுதாரரால் பேரூராட்சிக்கும் மாவட்ட ஆட்சியருக்கும் தொகை தமது வங்கி கணக்கிற்கு வரப்படவில்லை என தெரிவித்து புகார் அனுப்பி வைக்கப்பட்ட நிலையில், தொகையினை விடுவிக்கப்பட்டது தொடர்பாக மேற்காணும் வங்கிக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும் மனுதாரரின் கோரிக்கை தொடர்பாக HDFC வங்கியில் நேரில் சென்று கேட்டபோது திருமதி ராஜம்மாள் க/பெ. முனுசாமி என்பவரது ஆதார் எண். 280035831815 எந்த வங்கி கணக்குடன் இணைக்கப்பட்டுள்ளதோ அதற்கே ஆதார் எண் மூலம் தொகை விடுவிக்கப்பட்டுள்ளதாக தகவல் பெறப்பட்டது.

இப்பொருள் தொடர்பாக மேற்காணும் வங்கியில் இருந்து எழுத்துபூர்வமான அறிக்கை ஏதும் கிடைக்கப்பெறாத நிலையில் Lead District Manager அவர்களுக்கு அனைத்து ஆவணங்களும் அனுப்பிவைக்கப்பட்டு பயனாளிக்கு தொகையினை விடுவிக்க உரிய வங்கிக்கு அறிவுறுத்துமாறும், தொகையினை பெறுவதற்கான வழிமுறைகளை கேட்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேற்காணும் வங்கியில் இருந்தும் எந்த விதமான எழுத்து பூர்வமான தகவல் கிடைக்கப்பெறவில்லை. இப்பொருள் தொடர்பாக பென்னாகரம் காவல் நிலையத்திற்கும், துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களும் உரிய நடவடிக்கை

மேற்கொள்ள வேண்டி கடிதம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் காவல் நிலைய ஆய்வாளரின் நேரடி அறிவுரையின்படி தருமபுரி மாவட்ட குற்ற ஆவண கூடம், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கும் உரிய நபர் மீது சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொண்டு தொகை பெற்றுத்தர கேட்டு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பேரூராட்சியின் மூலம் 2015–16 ஆம் ஆண்டு முதல் 2021–22ஆம் ஆண்டு வரை 240 பயனாளிகளுக்கு பணியின் ஒவ்வொரு நிலைக்கும் (நான்கு நிலைகள்) Geo Teg மூலம் புகைப்படம் எடுக்கப்பட்டு அரசின் மான்யமான ரூ.2,10,000/– நான்கு தவணைகளாக ECS முறையில் விடுவிக்கப்பட்டும், மே–2022 முதல் PFMS முறையிலும் தொகை விடுவிக்கப்பட்டும் வருகிறது. நாளது வரை வேறு எந்த பயனாளியும் தொகை வரப்படவில்லை என தெரிவித்து எந்தவிதமான புகாரும் இப்பேரூராட்சிக்கு அளிக்கப்படவில்லை. இதில் பேரூராட்சி மூலம் எந்தவிதமான முறைகேடுகளும் ஏற்படவில்லை. மனுதாரரின் ஆதார் எண் இணைக்கப்பட்டுள்ள வங்கி கணக்கிற்கே தொகை சென்றுள்ளதால் இதில் பேரூராட்சி நிர்வாகம் பொறுப்பு ஏற்க இயலாத நிலையிலும் கூட பயனாளியின் நிலையினைக் கருத்தில் கொண்டு தொகை வேறு ஒருவருக்கு சென்றுள்ளதை கண்டறிந்து உரிய நபரிடம் இருந்து பெற்று வழங்க தேவையான முயற்சிகளை மேற்கொண்டு காவல் நிலைய குற்ற ஆவணக்கூடம் வரை கடிதம் அனுப்பப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோருக்கு இம்முறைமன்ற நடுவத்தில் 05.06.2023 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) 05.06.2023 அன்று திருமதி எம். ராஜம்மாள் என்பவர் உடல் நலமின்மை காரணமாக இம்முறைமன்றத்தில் ஆஜராகவில்லை. அவர் சார்பில் அவரது ஒன்றுவிட்ட தங்கை மகன் N. கொளந்தையப்பன் என்பவர் நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"எனது பெரியம்மா திருமதி ராஜம்மாள் என்பவர் தருமபுரி மாவட்டம் பென்னாகரம் டவுன், போடூர் காலனியில் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் வீடு கட்டி வருகிறார். அரசின் மானியத் தொகையாக ரூபாய் 2.10 இலட்சம் செலவில் மேற்கண்ட வீடு கட்டப்பட்டு வந்தது. வீடு கட்டுவதற்கான மானியத் தொகையில் ரூபாய் 50,000 + ரூ 50,000 என மொத்தம் 1 இலட்சம் ரூபாய் எனது பெரியம்மாவின் வங்கி கணக்கிற்கு பேரூராட்சியால் அனுப்பப்பட்டு, அத்தொகை எங்களால் பெறப்பட்டது. ஆனால் அதற்குப் பின்னர் கடந்த மே 2023ல் பேரூராட்சியால் அனுப்பப்பட்ட தொகை மேற்கண்ட முகவரியில் வசித்து வரும் எனது பெரியம்மா திருமதி ராஜம்மாள் என்பவரின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படாமல், மதுரையில் உள்ள எங்களுக்கு முன்பின் தெரியாத HDFC வங்கியில் வங்கிக் கணக்கு வைத்துள்ள வேறொருவர் பெயருக்கு அதாவது மதுரையைச் சேர்ந்த வினோத் கிருஷ்ணமூர்த்தி என்பவரின்

வங்கிக் கணக்கிற்கு சென்றுள்ளது. இது குறித்து பேரூராட்சியிலும், மாவட்ட ஆட்சியரிடமும் புகார் அளிக்கப்பட்டது. மேலும் பேரூராட்சி அலுவலகத்தில் நேரடியாக சென்று விசாரித்தபோது எனது பெரியம்மாவின் ஆதார் எண் இணைக்கப்பட்டுள்ள வங்கிக்குத்தான் பணம் அனுப்பப்பட்டுள்ளது என பொத்தாம்பொதுவாக பதில் அளிக்கின்றனர்.

எனவே, அனைவருக்கும் வீடு என்கின்ற திட்டத்திற்காக வழங்கப்படும் 3வது தவணை மானியத் தொகையான ரூபாய் 50,000/—ஐ பேரூராட்சி மூலம் எங்களுக்கு கிடைத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

6) பென்னாகரம் தேர்வு நிலை பேரூராட்சியின் செயல் அலுவலர் 05.06.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

தருமபுரி மாவட்டம் பென்னாகரம் பேரூராட்சியில் 2017—2018ம் ஆண்டு அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் மனுதாரருக்கு இரண்டு தவணையாக ரூபாய் 1 இலட்சம் ( 50,000 + 50,000 ) பென்னாகரத்தில் உள்ள இந்தியன் வங்கிக்கு ECS மூலம் முறையே 29.5.2019 மற்றும் 15.5.2020 ஆகிய நாட்களில் அனுப்பப்பட்டு மனுதாரரின் கணக்கில் சேர்க்கப்பட்டது. பின்னர் மூன்றாவது தவணைத் தொகை வழங்கும்போது திருமதி ராஜம்மாளின் ஆதார் கார்டு இணைக்கப்பட்டுள்ள HDFC வங்கிக் கணக்கிற்கு PFMS மூலம் அனுப்பப்பட்டது. மேற்கண்ட மூன்றாவது தவணை மனுதாரரால் பெறப்படவில்லை என புகார் பெறப்பட்டதன் அடிப்படையில் எச் டி எப் சி வங்கியை அணுகியபோது, திருமதி ராஜம்மாள் என்பவரது ஆதார் எண் 280035831815 எந்த வங்கி கணக்குடன் இணைக்கப்பட்டுள்ளதோ அதே வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது என தகவல் அளித்துள்ளனர். மேலும் மனுதாரருக்கு மேற்கண்ட தொகையை விடுவிக்க உரிய எச் டி எப் சி வங்கிக்கு அறிவுறுத்தம் செய்திடவும் எச் டி எப் சி வங்கியின் மேலாளர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். மேலும் இந்நேர்வு தொடர்பாக தருமபுரி மாவட்ட துணை கண்காணிப்பாளருக்கும் புகார் அளிக்கப்பட்டு சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளவும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் எனது 29.5.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன் என செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம் பென்னாகரம் தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

புகார் மனுதாரர் தமது மனுவில் 2017–2018 ஆம் ஆண்டிற்கான அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் பயனாளியாகிய தனக்கு அரசு வழங்கும் மானியத்தொகை மூன்றாம் தவணை ரூ.50,000/– எனது வங்கிக் கணக்கில் வரவாக்கம் செய்யப்படாமல், வேறொருவரின் வங்கிக் கணக்கிற்கு சென்றுள்ளதாகக் குறிப்பிட்டு, தமது முதுமை மற்றும் வறுமை நிலையைக் கருத்தில் கொண்டு மேற்படி தொகையை விரைவில் தமது கணக்கில் வரவாக்கம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

இந்நேர்வில் 2015–2016 முதல் 2021–2022 வரை பேரூராட்சிகள் மூலம் பயனாளிகளுக்கு GEO TAG மூலம் புகைப்படம் எடுக்கப்பட்டு ECS முறையில் தவணைத்தொகை விடுவிக்கப்பட்டுள்ளது எனவும் 2022 மே மாதம் முதல் PFMS முறையில் தொகை விடுவிக்கப்பட வேண்டுமென சுற்றறிக்கை பெறப்பட்ட நிலையில் PFMS முறையில் பயனாளிகளுக்கு தொகை விடுவிக்கப்பட்டுள்ளது எனவும் பென்னாகரம் தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். மேலும் மனுதாரரின் 12.12.2022 நாளிட்ட கடிதத்தின் மூலம் மனுதாரரின் சேமிப்புக் கணக்கில் மூன்றாவது தவணை ரூ.50000/– பெறப்படவில்லையென தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து செயல் அலுவலரின் 16.12.2022 நாளிட்ட கடிதத்தில் HDFC வங்கிக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது எனவும் மேலும் HDFC வங்கியில் நேரடியாக விசாரணை செய்யப்பட்டதில் மனுதாரரின் ஆதார் எண். 280035831815 எந்த வங்கிக் கணக்கில் இணைக்கப்பட்டுள்ளதோ அந்த வங்கிக்கு ஆதார் எண் மூலம் தொகை விடுவிக்கப்பட்டுள்ளதாக தகவல் பெறப்பட்டுள்ளது. எனவும் இதனைத் தொடர்ந்து 2.2.2023 நாளிட்ட கடிதத்தில் Lead District Manager அவர்களுக்கு அனைத்து ஆவணங்களும் அனுப்பி வைக்கப்பட்டு பயனாளிக்கு தொகை விடுவிக்க உரிய வங்கிக்கு அறிவுறுத்துமாறும் மற்றும் பென்னாகரம் காவல் நிலையத்திற்கும் துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள பென்னாகரம் செயல் அலுவலரால் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

அரசின் செயல் திட்டங்களின் முழுபயன்களும் பயனாளிக்கு முழுமையாக சென்றடைய வேண்டுமென்பதாலும் உரியதொகை பயனாளிகளுக்கு சென்றடைய சம்பந்தப்பட்ட நிர்வாகமே பொறுப்பு என்பதாலும் இந்நேர்வில் மனுதாரருக்கு அவருக்குச் செல்லவேண்டிய மானியத்தொகை உடனடியாக கிடைப்பதற்கு முழுமுயற்சியுடன் நடவடிக்கை எடுத்து மனுதாரர் கணக்கில் தொகை வரவு வைக்கப்பட்ட விவரத்தினை இம்முறைமன்றத்திற்கு 30 நாட்களுக்குள் தெரிவித்திட வேண்டுமென செயல் அலுவலரை அறிவுறுத்தி, அவ்வாறே ஆணையிடுகிறது.

இந்நேர்வில் உடனடி தீர்வுகாண HDFC வங்கி தலைவருக்கு முகவரியிட்டு மெயில் அனுப்பவும், Economic Offences Wing–க்கு (EOW) புகார் தெரிவிக்கவும், மேலும் தவறிழைத்தவர்கள் (மற்றும்) பண மோசடிக்கு உடந்தையாக இருந்தவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை தொடரவும் செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது. இது தொடர்பாக தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் குறைதீர்க்கும் நாளில் மனு அளித்திடவும் மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் நடத்தும் காலமுறை வங்கியாளர்கள் கூட்டத்தில் இப்பொருள் குறித்து HDFC

வங்கியின் அலுவலர்களுடன் கலந்தாலோசித்து தீர்வு காணுமாறு தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தப்படுகிறார்.

இம்மாதிரியான நேர்வுகளில் பயனாளிகளுக்கு தொகை விடுவிக்கும்போது எதிர்வரும் காலங்களில் பயனாளிகளின் வங்கி சேமிப்புக் கணக்கு எண், வங்கியின் IFSC எண் மற்றும் ஆதார் எண்களை சரிபார்த்து தொகை விடுவிக்கவும், பயனாளிக்கு தொகை வரவு வைக்கப்பட்டுள்ளதை உறுதி செய்யவும் அனைத்து செயல் அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கி சுற்றறிக்கை அனுப்பவும் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு இம்முறைமன்றம் அறிவுறுத்துகிறது.

2023—ஆம் ஆண்டு, ஜுன் 13—ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திருமதி எம். ராஜம்மாள்,
கதவு எண்.81, போடூர் காலனி,
பென்னாகரம் டவுன் மற்றும் வட்டம்,
தருமபுரி மாவட்டம்

2) செயல் அலுவலர்,
பென்னாகரம் தேர்வு நிலை பேரூராட்சி
தருமபுரி மாவட்டம்

3) மாவட்ட ஆட்சித் தலைவர்,
தருமபுரி மாவட்டம் , தருமபுரி

4) பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
நகர் நிர்வாக அலுவலகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.அர்.சி நகர், சென்னை – 28.

5) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
நகர் நிர்வாக அலுவலகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை –600028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

16/6/23
உதவிப் பதிவாளர்.

சென்னை—600 032